JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

DVC.No. 9/2021 Date: 07.12.2023 P.W.2

பெயர் ° ˙ திரு.சீனிவாசன்
தந்தை /கணவர் பெயர் ° தர்மலிங்கம்

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 07th day of December 2023

1, 3 எதிர்மனுதாரர்கள் ஆஜரில் இல்லை. ச/பி 317 குவிமுச மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

சாட்சி மனுவின் பெயரில் திரும்ப அழைக்கபட்ட சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை -

1. நான் மனுதாரரின் தாய் மாமா என்றால் சரிதான். நான் சூரியா என்ற ஒரு நபருடன் ஊரைவிட்டு சென்று முத்தாப்புதுபேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு நான் காவல் நிலையம் சென்று மன்னிப்பு கடிதம் எழுதிகொடுத்தேன் என்றால் இல்லை. எதிர்மனுதாரருக்கும் 1ம் மனுதாரருக்கு எப்பொழுது திருமணம் நடைபெற்றது என்றால் தேதி ஞாபகம் இல்லை, திருவள்ளூரில் நடைபெற்றது, திருமண மண்டபம் பெயர் ஞாபகம் இல்லை. நான் பிரமாண வாக்குமூலத்தில் எந்தவித சங்கதிகளையும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எதிராக விவாகரத்து மனு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பின்னர் தான் இந்த மனுவானது மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் வீட்டில் பிரச்சினை ஏற்பட்ட பின்னர் நான் 1ம் எதிர்மனுதாரருக்கு செல்வதில்லை என்றால் சரிதான்.

2. மனுதாரர் அவரது வீட்டில் நடக்கும் பிரச்சினைகளை அவர் என்னிடம் கூறி தான் நான் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். நான் ஆவடி அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு 1ம் மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் குடும்ப பிரச்சினைக்காக நான் சென்றேனா என்றால் செல்லவில்லை. நான் இந்நீதிமன்றத்தில் சங்கீதா என்பவருக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் இடையே இருந்ததாக கூறப்படும் பழக்கங்களுக்கு ஆதாரங்களை சமர்பித்துள்ளேனா என்றால் இல்லை. குடும்ப பிரச்சினை 1ம் எதிர்மனுதாரருக்கும் மனுதாரருக்கும் ஏற்பட்ட சிறு சிறு குடும்ப பிரச்சனைகளை பெரியதாக்கி நான் தான் பிரித்தேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Sd/- V.Paramveer,
Judicial Magistrate,
Ambattur.

//True Copy//

Judicial Magistrate,
Ambattur